# என் பந்து

வகுப்பு: 1, பாடம்: 2, தமிழ்

பல வருடங்களுக்குப் பின் மீண்டும் குழந்தைகள் உலகில் காலடி வைத்துள்ளேன். ஒன்றாம் வகுப்பு தமிழில் என்ன குழந்தைகள் கற்க வேண்டும்? எப்படி அவர்களுக்கு உதவப் போகிறோம்? கற்றல் சூழலை எவ்வாறு உருவாக்கப் போகிறோம் என்பன போன்ற கேள்விகள் மனதைக் குடைந்து கொண்டே இருந்தன.

முதல் மாதம் முழுவதும் விளையாட்டுகள், பாடல்கள், கதைகள், நாடகம், படங்களை விவரித்தல் என்பது போன்ற செயல்பாடுகளில் சென்றது. ஜூலை மாதம் ‘என் பந்து’ பாடத்தில் ட, ப, ம, ய, ர, ழ என்ற எழுத்துக்களை அறிமுகம் செய்தல் வேண்டும்.

**ஒவ்வொரு எழுத்தாகப் பயிற்சி அளிப்பது எனக்கு அர்த்தமற்றதாகத் தோன்றியது. தனி ஒரு எழுத்துக்குப் பொருளில்லை. பொருளில்லா எதனுடனும் தொடர்பை ஏற்படுத்த முடியாது. தொடர்பில்லாதவற்றைப் புரிந்து கொள்வது இயலாத காரியம்.** அதிலும் முதலாம் வகுப்பு குழந்தைகள்? அதனால் கதைகள் மூலம் வார்த்தைகளையும், வார்த்தைகளைக் கொண்டு எழுத்துக்களையும் அறிமுகம் செய்தேன்.

முதலில் வார்த்தைகளுக்கு உரிய படங்களை நகல் எடுத்துக் கொடுத்து வண்ணம் தீட்டச் செய்தேன். அப்படங்களைப் பெரிய அட்டையில் ஒட்டி பின் அவற்றின் பெயரை பெரிய எழுத்துக்களில் எழுதினேன். ஒவ்வொரு படமாகக் காண்பித்துக் கதையைக் கூறினேன்.

அதே கதையை இரண்டாம் முறை கூறும்போது ஒவ்வொரு வார்த்தையும் கரும்பலகையில் எழுதினேன். **இப்போது அந்த வார்த்தைகளுக்கு உயிருண்டு. ஏனெனில் குழந்தைகள் அவற்றை வார்த்தைகளாகப் பார்க்கவில்லை. கதையின் அங்கமாகப் பார்த்தனர்.** அவர்களால் கதையின் நிகழ்வுகளையும் படங்களையும் அவற்றின் பெயர்களையும் அவற்றிற்கான ஒலிகளையும் இணைத்துப் பார்க்க முடிந்தது. இதைப் பரிசோதிக்க ஒவ்வொரு குழந்தையையும் அழைத்துச் சிறிய சார்ட் பேப்பரில் அவர்கள் வண்ணம் தீட்டிய படத்தின் வார்த்தையை எழுதிக் கொடுத்து அதற்கான படத்தை வீட்டில் வரைந்து வரச் சொன்னேன்.

அவர்களின் படங்களைக் கொண்டே மாணவர்களை chain story சொல்லச் சொன்னேன். மாணவர்கள் வட்டமாக அமர்ந்து ஆளுக்கொரு நிகழ்வாக அடுத்தடுத்து சொல்லிக்கொண்டே வந்து கதையை முடிக்க வேண்டும். ஒன்றாம் வகுப்பு மாணவர்களால் அதைச் செய்ய முடிந்தது.


விளையாடுவோம்; கற்போம்

எழுத்துக்களை அறிமுகம் செய்ய அவர்களது வார்த்தைகளை சிறிய அட்டையில் எழுதி கழுத்தில் மாட்டி விட்டேன். அவர்கள் தங்கள் நண்பர்களிடம் தனது வார்த்தையைக் காட்டியும், அவர்களது வார்த்தைகளைக் கேட்டும் விளையாடத் தொடங்கினர்.

பிறகு அவர்களைக் குழுக்களாகப் பிரித்து **ஒவ்வொரு குழுவிற்கும் எழுத்துக்களைப் பெரிய அளவில் கொடுத்தேன். அவர்கள்**

**அந்த எழுத்துக்களைக் cut out களாக வெட்டி எடுத்தனர். இதனால் எழுத்தின் வடிவத்தை அறிமுகப் படுத்த முடிந்தது. மேலும் அதை வண்ணம் தீட்டும் செயல் குழந்தைகளின் கைகளை எழுதுவதற்குத் தயார்படுத்தியது.**



எழுத்துக்களின் வடிவம் அறிதல்

அடுத்ததாக அவ்வார்த்தைகளைச் சிறிய தாளில் எழுதி, விசிறி மடிப்பது போல் மடித்தேன். ஒவ்வொரு மடிப்பைப் பிரிக்கும் போது ஒவ்வொரு எழுத்தாகத் தெரியும். மாணவர்கள் ஒவ்வொரு எழுத்தாக வாசித்து கடைசியில் முழு வார்த்தையையும் வாசித்தனர். உ.ம். ப- பட்- பட்ட- பட்டம்.

மேலும் ஒரு செயல்பாடாக, வெட்டிச் சேர்க்கும் விளையாட்டை விளையாடினோம். சிறு அட்டைகளில் வார்த்தைகளை எழுதினேன். ஒவ்வொன்றையும் மாணவர்களிடம் காட்டி வாசித்தேன். பின் ஒவ்வொரு எழுத்தாக வெட்டினேன். இப்போது மாணவர்கள் இந்த எழுத்துக்களைக் கொண்டு வார்த்தையை உருவாக்கினர். இதன் மூலம் **ஒரு வார்த்தையுள் பல எழுத்துக்கள் இருக்கும் என்பதை உணரச் செய்தேன்.**

இறுதியாக, ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் உதவியுடன் பட்டம் செய்து பறக்க விட்டோம்.

**எனக்குக் கிடைத்த கற்றல்கள்:**

- கதை மூலம் வார்த்தைகளை அறிமுகப் படுத்தியதால் குழந்தைகள் அவ்வார்த்தைகளை எளிதாகப் படித்தனர். மேலும் எழுத்திலிருந்து வார்த்தைகளுக்குப் பதில் வார்த்தை களிலிருந்து எழுத்துகளுக்கு வந்ததால் எழுத்தின் வடிவம் ஓசை என்பனவற்றைக் கற்பது குழந்தைகளுக்கு எளிதாக இருந்தது.
- தினமும் அவர்களது கழுத்தில் வார்த்தை அட்டையை மாட்டி அப்பெயர் சொல்லியே அழைத்ததால் குழந்தைகள் மனதில் வார்த்தைகள் பதிந்தன.
- வார்த்தைகளைக் கரும்பலகையில் எழுதி வாசித்தல் பயிற்சி கொடுக்கும்போது “அம்மா படிக்க பிடிக்கல” என்பது பெரும்பாலான குழந்தைகளின் எண்ணமாக இருந்தது. ஆனாலும் வாசித்தல் பயிற்சி அளிக்க வேண்டுமே. எனவே கழுத்தில் தொங்கவிடும் அட்டையை மாற்றி மாற்றி அணியச் செய்தேன். இவ்வாறு செய்தபோது அவர்களாகவே வந்து, “இது என்ன? எப்படி படிக்கனும்?” என்று ஆர்வத்துடன் கேட்டுக் கற்றனர்.
- எழுத்துக்களை cut out செய்து வண்ணம் தீட்டியது அதன் வடிவத்தைக் குழந்தைகள் உணர ஏதுவாக இருந்தது.
- ஆனாலும் சில குழந்தைகள் எனக்குச் சவாலாகவே இருந்து கொண்டிருக்கின்றனர்.



குழந்தைகளின் கைகளை எழுதுவதற்குத் தயார்படுத்த



**சு. கவிதா**

தொ.ப.ஆ, அ.தொ.ப. மணவெளி (அ)